**நம்மாழ்வார் அருளிச் செய்த**
**திருவாய்மொழி**
**ஏழாம் பத்து**

**ஒன்பதாம் திருவாய்மொழி - என்றைக்கும்**
**எம்பெருமான் தனக்கும் தன் அடியார்க்கும் இனிதாகக் கவி பாடும்படி தம்மை இங்கு வைத்ததற்குக் கைம்மாறு இல்லாமையை ஆழ்வார் அருளிச் செய்தல்**

** என்றைக்கும் என்னை * உய்யக் கொண்டு போகிய *
அன்றைக்கு அன்று என்னைத் * தன் ஆக்கி என்னால் தன்னை **
இன் தமிழ் பாடிய ஈசனை * ஆதியாய்
நின்ற என் சோதியை * என் சொல்லி நிற்பனோ? 1

என் சொல்லி நிற்பன்? * என் இன்னுயிர் இன்று ஒன்றாய் *
என் சொல்லால் யான் சொன்ன * இன் கவி என்பித்து **
தன் சொல்லால் தான் தன்னைக் * கீர்த்தித்த மாயன் * என்
முன் சொல்லும் * மூ உருவாம் முதல்வனே 2

ஆம் முதல்வன் இவன் என்று * தற்றேற்றி * என்
நா முதல் வந்து புகுந்து * நல் இன் கவி **
தூ முதல் பத்தர்க்குத் * தான் தன்னைச் சொன்ன * என்
வாய் முதல் அப்பனை * என்று மறப்பனோ? 3

அப்பனை என்று மறப்பன்? * என் ஆகியே *
தப்புதல் இன்றித் * தனைக் கவி தான் சொல்லி **
ஒப்பிலாத் தீ வினையேனை * உய்யக் கொண்டு *
செப்பமே செய்து * திரிகின்ற சீர் கண்டே 4

சீர் கண்டு கொண்டு * திருந்து நல் இன் கவி *
நேர்பட யான் சொல்லும் * நீர்மை இலாமையில் **
ஏர்விலா என்னைத் * தன் ஆக்கி என்னால் தன்னை *
பார் பரவு இன் கவி * பாடும் பரமரே 5

இன் கவி பாடும் * பரம கவிகளால் *
தன் கவி தான் * தன்னைப் பாடுவியாது ** இன்று
நன்கு வந்து என் உடன் ஆக்கி * என்னால் தன்னை *
வன் கவி பாடும் * என் வைகுந்த நாதனே 6

வைகுந்த நாதன் * என வல்வினை மாய்ந்தற *
செய் குந்தன் தன்னை * என் ஆக்கி என்னால் தன்னை **
வைகுந்தன் ஆகப் * புகழ வண் தீங்கவி *
செய் குந்தன் தன்னை * எந்நாள் சிந்தித்து ஆர்வனோ? 7

ஆர்வனோ? ஆழி அங்கை * எம்பிரான் புகழ் *
பார் விண் நீர் முற்றும் * கலந்து பருகிலும் **
ஏர்விலா என்னைத் * தன் ஆக்கி என்னால் தன்னை *
சீர் பெற இன் கவி * சொன்ன திறத்துக்கே 8

திறத்துக்கே துப்பரவாம் * திருமாலின் சீர் *
இறப்பு எதிர் காலம் * பருகிலும் ஆர்வனோ? **
மறப்பிலா என்னைத் * தன் ஆக்கி என்னால் தன்னை *
உறப் பல இன் கவி * சொன்ன உதவிக்கே 9

உதவிக் கைம்மாறு * என் உயிர் என்ன உற்று எண்ணில் *
அதுவும் மற்று ஆங்கு அவன் தன்னது * என்னால் தன்னை **
பதவிய இன் கவி * பாடிய அப்பனுக்கு *
எதுவும் ஒன்றும் இல்லை * செய்வது இங்கும் அங்கே 10

** இங்கும் அங்கும் * திருமால் அன்றி இன்மை கண்டு *
அங்ஙனே வண்குருகூர்ச் * சடகோபன் **
இங்ஙனே சொன்ன * ஓர் ஆயிரத்து இப்பத்தும் *
எங்ஙனே சொல்லினும் * இன்பம் பயக்குமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---